

கோவை தெற்கு சட்டமன்றத் தொகுதி, தெப்பக்குளம் பகுதி, வார்டு 70, தெப்பக்குளம் மைதானம் பகுதியில் கழக வேட்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார், உடன் முன்னாள் அமைச்சர் பொங்கலூர் நா.பழனிச்சாமி, கோவை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார், பகுதி கழக பொறுப்பாளர் ம.நா.க வீதி கண்ணன் உள்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் போட்டிடும் வேட்பாளர் எம்.ரவி (எ) சுப்பிரமணியன் தனது வேட்பு மனுவினை தேர்தல் நடத்தும் அலுவலரிடம் தாக்கல் செய்தார். உடன் திருப்பூர் தெற்கு மாநகரக் கழக பொறுப்பாளர் ஈ.தங்கராஜ் உள்பட கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.



கிணத்துக்கடவு சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர் கோவை தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.வி.கே.எஸ்.சபரி கார்த்திகேயன் தனது வேட்பு மனுவை தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வழங்கினார். உடன் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.



நாமக்கல் கிழக்கு மாவட்டம் நாமக்கல் ஒன்றியத்திற்குட்பட்ட காதப்பள்ளியில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் நாமக்கல் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர் ப. ராணிக்கு ஆதரவாகவும், சேந்தமங்கலம் ஒன்றியத்திற்குட்பட்ட உத்திரடிகாவல் ஊராட்சி நரசிம்மன்காட்டில் வேட்பாளர் பூமலர் பொன்னுசாமிக்கு ஆதரவாகவும் . நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் ஒன்றிய பகுதிகளில் பொதுமக்களிடம் தீவிர வாக்கு பிரச்சாரத்தில் ஈடுபட்டார். இந்நிகழ்ச்சியில் நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், ஒன்றிய கழக செயலாளர்கள் வி.கே.பழனிவேல், அசோக்குமார், மாவட்ட துணை செயலாளர் ராணி, பேரூர் கழக செயலாளர்கள் தனபாலன், முருகேசன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் ஆனந்த்பாபு உள்ளிட்டோர் மற்றும் கூட்டணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




தருமபுரி தனியார் மண்டபத்தில் நடைபெற்ற வேட்பாளர் அறிமுகக் கூட்டத்தில் தருமபுரி தி.மு.க. மாவட்டப் பொறுப்பாளர் ஆ.மணி எம்.பி. மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் தருமபுரி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் தே.மு.தி.க. வேட்பாளர் டாக்டர்.இளங்கோவனை அறிமுகப்படுத்தினார். உடன் தொகுதி பார்வையாளர் செங்குட்டுவன், நகரச் செயலாளர்கள் நாட்டான் மாது,எம்.பி.கௌதம், ஒன்றிய செயலாளர்கள் டி.எல்.காவேரி, ஏ.எஸ்.சண்முகம், என்.பி.பெரியண்ணன் மற்றும் ஹரிவிக்னேஷ், அழகுவேல் மற்றும் தே.மு.தி.க. உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



நாகை மாவட்டம் வேதாரண்யம் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் செயல்வீரர்கள் கூட்டம் வேதாரண்யத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என்.கௌதமன் சிறப்புரையாற்றினார். உடன் மாநில விவசாய அணி துணைத் தலைவர் எஸ்.கே.வேதரத்தினம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நாகை நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ், காங்கிரஸ் கட்சி மாவட்ட தலைவர் பி.வி.ஆர்.விவேக், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அம்பிகாபதி, விடுதலைச் சிறுத்தைகள் சுமா செல்வராசு, ம.தி.மு.க. கட்சியைச் சேர்ந்த இளங்கோவன், ஜி.பி.ராமமூர்த்தி, தே.மு.தி.க. மோகன், எஸ்.எம்.ராஜேந்திரன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் அலி, மனிதநேய ஜனநாயக கட்சி மஜீத், திராவிடர் கழகம் கி.முருகையன், நெப்போலியன், கழக தீர்மான குழு உறுப்பினர் என்.வி.காமராஜ், தலைமைக் கழக வழக்கறிஞர் தலைமைச் செயற்குழு உறுப்பினர் க. மறைமலை, மாவட்ட துணைச் செயலாளர்கள் சோ.ரவிச்சந்திரன, கற்பகம் நீலமேகம், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் தலைஞாயிறு மகா.குமார், வேதாரண்யம் கிழக்கு என்.சதாசிவம், வேதாரண்யம் மேற்கு உதயம் வே.முருகையன், தலைஞாயிறு பேரூர் செயலாளர் சி. சுப்பிரமணியன், பொதுக்குழு உறுப்பினர்கள் எல்.எஸ்.இ.பழனியப்பன் மற்றும் பலர் உள்ளனர்.



கோபி சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற கூட்டணிக் கட்சிகளின் கழக வேட்பாளர் என்.நல்லசிவம் தனது வேட்புமனுவினை தேர்தல் அதிகாரியிடம் தாக்கல் செய்தார். உடன் கழக விவசாய அணி இணைச் செயலாளர் கள்ளிப்பட்டி மணி, கழக நெசவாளர் அணி துணைச் செயலாளர் மணிமாறன், காங்கிரஸ் கட்சி முன்னாள் மாநில துணைத் தலைவர் பி.என்.நல்லசாமி உள்ளனர்.

### தமிழ்நாட்டிலேயே

# கிணத்துக்கடவு தொகுதியை முன்மாதிரி தொகுதியாக மாற்றுவேன்!

## கழக வேட்பாளர் கே.வி.கே.எஸ்.சபரிகார்த்திகேயன் பிரச்சாரத்தில் உறுதி!

கிணத்துக்கடவு, ஏப். 8–

கோவை மாவட்டம் கிணத்துக்கடவு சட்டமன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் கே.வி.கே.எஸ்.சபரி கார்த்திகேயன் மதுக்கரை தாலுக்கா அலுவலகத்தில் நேற்று முன்தினம் காலை தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார்.

அதன் பிறகு அவர் அளித்த பேட்டி வருமாறு:-

“கழகத் தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆசியோடும், கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் அண்ணன் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆதரவோடும் கிணத்துக்கடவு சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளேன். மேற்கு மண்டல கழகப் பொறுப்பாளர் அண்ணன் செந்தில் பாலாஜி அவர்களின் ஒத்துழைப்பு, கூட்டணி கட்சி தோழர்கள், கழக உடன்பிறப்புகளின் நல் ஆதரவு ஆகியவற்றோடு தேர்தல் களத்தினை சந்தித்து வருகிறேன்.

இந்தியாவிலேயே இரட்டை இலக்கத்தில் வளர்ச்சி சதவீதத்தை உருவாக்கிய ஒரே முதல்வர் திராவிட மாடல் அரசின் நாயகர் மு.க. ஸ்டாலின் அவர்கள். கடந்த ஐந்தாண்டு காலத்தில் நமது அரசு கொண்டு வந்த திட்டங்களும், ஆற்றிய மக்கள் பணியும் தமிழ்நாட்டு வரலாற்றில் இடம்பெறக்கூடியவை.

தமிழ்நாட்டில் கழக அரசின் திட்டங்களால் பயன்பெறாத தனி நபரே கிடையாது என்கிற நிலை தான் நிலவுகிறது. இந்த சூழலில் கிணத்துக்கடவு தொகுதியானது கடந்த 25 ஆண்டுகளாக பின் தங்கி போயுள்ளது. தற்போதைய சட்டமன்ற உறுப்பினரால் எந்த முன்னேற்றமும் இன்றி மக்கள் விரக்தி யோடு காணப்படுகிறார்கள்.


எனவே, தற்போது மக்களின் ஆதரவோடு சட்டமன்றம் சென்று தொகுதியின் பிரச்சினைகளை சட்டமன்றத்தில் எடுத்துரைத்து அதற்கான தீர்வினை உடனடியாக பெற்று மக்கள் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் சட்டமன்ற உறுப்பினராக இருப்பேன் என்பதை உறுதிபட கூறுகிறேன்.

நீண்டகாலமாக கிணத்துக்கடவு தொகுதியில் மக்கள் பணியாற்றி மக்களின் நம்பிக்கை பெற்றவனாக இருந்து வருகிறேன். ஆகவே, இந்த முறை இங்கே உதய சூரியன் உதிக்கும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் தொடரும், அதன் வழியே கிணத்துக்கடவு தொகுதி தமிழ்நாட்டில் ஒரு முன்மாதிரி தொகுதியாக மாறும்.

இவ்வாறு அவர் கூறினார்.

உடன் கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டனர்.

# பதற்றமும் பதக்கமும்!




**தோ**ல்வியை
தடுக்க
வழியே இல்லை
என்றதும்

தரமற்ற
பகைவர்கள்

கையில் எடுக்கிற
கடைசி
ஆயுதம்
அவதூறு ...

இதற்கு
சமகாலத்தில்

ஏகபோக
எடுத்துக்காட்டு
எடப்பாடி

ஆம்...

வாய்ப்பில்லை
என்றதும்

அன்னாரது
வாய்ச்சொல்
மொத்தமும்

வசைச்
சொல்லாய்
வழிகிறது.

தேர்ந்து
எடுக்காது
கூவத்தூரில்

ஊர்ந்து
எடுக்கப்பட்ட
குத்தகையே
ஆனாலும்

நாமும்
முதல்வராக
இருந்தோமே
என்கிற

முனையளவு
பக்குவமும்
இல்லாத

முச்சந்தி பேச்சாளராய்

பழனிசாமி
பண்பற்று
பேசுவது

முன் கூட்டிச்
சொல்கிறது...

”எங்கள்
முத்துவேல்
கருணாநிதி
ஸ்டாலின்
தான்

சித்திரைத்
திங்களில்
செங்கோல்

ஏந்தப் போகும்

பைந்தமிழ்
பூமியின்
பதினேழாம்
முதலமைச்சர்
என்பதை. .

ஆம்...

பகையோரது
பதற்றம்
உணர்த்துகிறது

உதயசூரியனுக்கே
பதக்கம்
என்பதை

**என்னநாஞ் சொல்றது**



**மருது அழகுராஜ்**
*கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்*